




# சுங்கைபூலோ முதல் செமாந்தான் வரை எம்.ஆர்.டி. சேவை

கோலாலம்பூர்,டிச.16– சுங்கை பூலோ - காஜாங்கிற்கு (எஸ்.பி.கே.) இடையிலான எம்.ஆர்.டி. ரயில் பயணச் சேவையை நேற்று பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் தொடக்கி வைத்தார்.

நாட்டின் பொதுப்போக்குவரத்து முறையில் புதிய அறிமுகமாக இந்த எம்.ஆர்.டி. சேவை தொடங்கப்பட்டிருக்கிறது. நேற்று தொடங்கப்பட்ட முதற்கட்ட பயணச் சேவையில் சுங்கை பூலோ தொடங்கி செமந்தான் வரையில் மொத்தம் 12 நிலையங்கள் உட்படுத்தப்பட்டிருக்கின்றன.

மொத்தம் 21 கிலோ மீட்டர் தூரத்தை உட்படுத்திய இந்தப் பயணச் சேவை இன்று(டிசம்பர் 16ஆம் தேதி ) காலை 6 மணி முதல் தொடங்குகிறது.

சுங்கை பூலோ, கம்போங் செலாமாட், குவாசா டாமன்சாரா, குவாசா சென்ட்ரல், கோத்தா டாமன்சாரா, சூரியன்,முத்தியாரா டாமன்சாரா, பண்டார் உத்தாமா, தாமான் துன் டாக்டர் இஸ்மாயில், பிலியோ டாமன்சாரா, பூசாட் பண்டார் டாமன்சாரா, செமாந்தான் ஆகிய 12 நிலையங்களை இந்த முதற்கட்டச் சேவை உட்படுத்தி இருக்கும்.

குவாசா டாமன்சாரா எம்.ஆர்.டி. நிலையத்தில் நேற்று பிரதமர் நஜிப் அந்தப் புதிய போக்குவரத்தைத் தொடக்கி வைத்தார். நேப்பாளத்தின் துணைப் பிரதமர் கிருஷ்ண பகதூர் மஹாரா, அரசாங்கத் தலைமைச் செயலாளரும், எம்.ஆர்.டி. கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவருமான டான்ஸ்ரீ டாக்டர் அலி ஹம்ஸா, போக்குவரத்துத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ லியோவ் தியோங் லாய், இரண்டாவது நிதி அமைச்சர் டத்தோ ஜொஹாரி அப்துல் கனி, தரை பொதுப்போக்குவரத்து ஆணையத்தின் (ஸ்பாட்) தலைவர் டான்ஸ்ரீ சைட் ஹமிட் அல்பார் , எம்.ஆர்.டி. கார்ப்பரேஷன் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோஸ்ரீ ஷாஹ்ரில் மொக்தார் ஆகியோர் இந்தத் தொடக்க விழாவைக் காணத் திரண்டிருந்தனர்.

இந்த 12 எம்.ஆர்.டி. நிலையங்களையும் தொடர்புப்படுத்த 26 சாலைகளில் மொத்தம் 120 ஊடுச் சேவை பேருந்துகளும் அமர்த்தப்பட்டிருக்கின்றன.

இதனிடையே செமாந்தானிலிருந்து காஜாங் வரைக்குமான 30 கிலோ மீட்டர் தொலைவை இணைக்கும் 2ஆம் கட்டப் பயணச் சேவை வரும் 2017ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் தேதி தொடக்கி வைக்கப்படும் என்று அறியப்படுகிறது. மொத்தம் 19 எம்.ஆர்.டி. நிலையங்களை இந்த இரண்டாம் கட்ட நிர்மாணிப்பு உட்படுத்தி இருக்கும்.